**நல்லூர் பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நல்லூர் பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வடமராட்சி தெற்குமேற்கு பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் சபையினால் மேற்கொள்ளப்பட்ட 40 விடயங்களானது நிறைவேற்றப்படாத போதிலும் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் தயாரிக்கப்பட்டு சில்லறைக்கடன் கொடுநர் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தமையினால் ரூபா 79,369,991 நடப்பு பொறுப்புக்கள் அதிகரித்தும் வருமான மிகை குறைத்தும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | சபையின் வேலைத்திட்டங்கள் கொவிட் - 19 காரணமாக எதிர்பார்த்த வருமானத்தினை அடைவதில் ஏற்பட்ட இடர்பாடுகள் மற்றும் துறை சார்ந்த மனித வளப்பற்றாக்குறை காரணமாக வருட இருதியிலேயே கேள்வி கோரப்பட்டதால் இவ் ஒப்பந்த தொகை சில்லறைக்கடனாளிகள் கணக்கில் ஒதுக்கம் செய்யப்பட்டது. இனிவரும் காலங்களில் தங்களின் ஆலோசனைக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு கொள்கைகளிற்கமைவாக நடவடிக்கைகள் நிறைவுபெற்றமையை உறுதிப்படுத்தி பதிவுகள் மேற்கொள்ளப்படுவதுடன் குறித்த தவறுகள் சீர்செய்ப்படல் வேண்டும். |
| (ஆ) | உள்ளூர் அபிவிருத்திக்கடனிற்காக 2022 ஆம் ஆண்டு செலுத்தப்பட வேண்டிய கடன் ரூபா 1,228,438 நிதிக்கூற்றில் நடைமுறைப் பொறுப்பாக வெளிப்படுத்தப்பட வேண்டியிருந்தும் கடன் மூலதனத்திற்குள் உள்ளடக்கப் பட்டிருப்பதனால் கடன் மூலதனமானது அப்பெறுமதியினால் அதிகரித்து வெளிப்படுத்தப் பட்டிருந்ததுடன் நடைமுறைப் பொறுப்பு குறைத்து வெளிப்படுத்தப் பட்டிருந்தது. | மீளாய்வாண்டில் நிதிக்கூற்றில் கடன் மூலதனத்தில் (குறிப்பு இல -13) தவறுதலாக 2020 இன் ஆரம்பமீதி தொகையினை காட்டப்பட்டுள்ளது. இவ்வாறான தவறுகள் இனிவரும் காலங்களில் இடம் பெறாத வண்ணம் கருத்தில் கொள்ளப்படும். | கணக்கீட்டு கொள்கைகளிற்கமைவாக நடவடிக்கைகள் நிறைவுபெற்றமையை உறுதிப்படுத்தி பதிவுகள் மேற்கொள்ளப்படுவதுடன் குறித்த தவறுகள் சீர்செய்ப்படல் வேண்டும். |

### 1.6.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் பின்வரும் 03 விடயங்களின் கடந்த ஆண்டு இறுதியில் கணக்காய்வு செய்யப்பட்ட இறுதி மீதிக்கும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றில் காட்டப்பட்ட ஆரம்ப மீதிக்கும் இடையில் வேறுபாடுகள் ரூபா 1,590,021 பெறுமதியிலிருந்தது. | தவறுதலாக இவ் மீதிகள் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அடுத்த நிதிக் கூற்றில் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இனிவரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் நடைபெறமாட்டாது. | ஆவணங்களில் காணப்படும் பெறுமதிகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதுடன் குறித்த தவறுகள் உரிய ஆவணங்களில் சீர் செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் நிதிக்கூற்றின் கடன் மூலதனத்திற்கும் (குறிப்பு.இல 13) வெளிப்படுத்தல் குறிப்பில் காட்டப்பட்ட கடன் மூலதனத்திற்க்குமிடையில் ரூபா 1,028,129 வேறுபாடு காணப்பட்டமை அவதானிக்கப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டில் நிதிக்கூற்றில் கடன் மூலதனத்தில் (குறிப்பு இல -13) தவறுதலாக 2020 ஆரம்பமீதி தொகையினை காட்டப்பட்டுள்ளது. இவ்வாறான தவறுகள் இனிவரும் காலங்களில் இடம் பெறாத வண்ணம் கருத்தில் கொள்ளப்படும். | ஆவணங்களில் காணப்படும் பெறுமதிகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதுடன் குறித்த தவறுகள் உரிய ஆவணங்களில் சீர் செய்யப்படல் வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| விடயம் | தொகை | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்று | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| ஆழ்நிதி உதவு தொகை ஒதுக்கம். | 20,269,673 | சபைத் தீர்மானம் | ஆழ்நிதி உதவுதொகைக் கணக்கில் காட்டப்பட்டுள்ள ரூபா 20,269,673 ஆனது சொத்துக்களின் தேய்மானத்தினை சீர் செய்வதற்காக நிலையான வைப்பில் காட்டப்பட்டு வருகின்றது. | சபை தீர்மானம் நிறைவேற்றப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளல். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 164,717,484 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 105,363,368 ஆகும்.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| **(அ) வீதவரி** | | |
| நல்லூர் பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றின் மீது கடந்த 02 வருடங்களிற்கு மேலாக அறவிடப்பட வேண்டிய ரூபா 13,195,388 பெறுமதியான ஆதன வரி நிலுவையை அறவிடப்படாததுடன் மீளாய்வாண்டில் வீதவரியின் பட்டியல்படுத்தப்பட்ட வருமானம் ரூபா 29,764,219 ஆகக் காணப்பட்ட போதும் ரூபா 12,763,950 பெறுமதியானது சேகரிக்கப்பட்டிருக்கவில்லை. | சிவப்பு அறிவித்தல் வழங்கி ஆதனவரி நிலுவையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டது. 2021இல் நடமாடும் சேவையை வழங்குதலில் ஏற்பட்ட இடர்பாடுகள் காரணமாக ஆதனவரி நிலுவை அறவிட நடவடிக்கை எடுக்க முடியவில்லை.<br>2022 ஆம் ஆண்டுக்கான பாதீட்டில் இவ்வாறான விடயங்கள் தவிர்க்கப்பட்டு சரியான பெறுமதியில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான தவறுகள் இனிவரும் காலங்களில் சீர்செய்யப்படும். | ஆதன வரி நிலுவைகளை விரைவாக அறவிடுவதற்குரிய ஆக்கபூர்வமான உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| **(ஆ) நீதிமன்ற தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்** | | |
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2021 திசெம்பர் 31 இல் கிடைக்க வேண்டியிருந்த நீதிமன்ற தண்டம் ரூபா 445,011 மற்றும் 05 வருடங்களிற்கு மேலாக அறவிடப்பட வேண்டிய ரூபா 3,875,162 மீளாய்வாண்டிற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 822,294 முத்திரைதீர்வை நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நீதிமன்ற தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது. மற்றும் 05 வருடங்களிற்கு மேலாக அறவிடப்பட வேண்டிய ரூபா 3,875,162 இல் பதிவழிப்பு செய்வதற்காக ரூபா 2,894,342 கௌரவ ஆளுநரின் அனுமதிக்கு அனுப்பப்பட்டுள்ளது. மிகுதி ரூபா 980,820 ஐ பதிவழிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | கணக்கீட்டு கொள்கைகளிற்கமைவாக இருப்பு வெளிப்படுத்தல் தவறானது சீர்செய்யப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்கள் முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகளும் நலன்புரியும் ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 செயற்திட்டங்கள், செயற்பாடுகள் அல்லது மூலதன வேலைகளில் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| 03 வேலைத்திட்டங்களினை நிறைவேற்றுவதில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டன. | Covid 19 தொற்று மற்றும் மழை காரணமாக உரிய காலத்தில் வேலைகள் நிறைவேற்ற முடியவில்லை. | வேலைத்திட்டங்கள் உரிய காலப்பகுதியில் ஆரம்பித்து முடிவுறுத்தப்படுவதனை உறுதிப்படுத்தல் வேண்டும். |

**3.2 மனித வளங்கள் முகாமைத்துவம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **சிபார்சு** |
|---|---|---|
| **ஊழியர் வெற்றிடங்களும் மிகைகளும்** | | |
| சபையின் அனுமதிக்கப்பட்ட பதவியணியினர் 134 ஆகவும் மீளாய்வாண்டின் உள்ளவாறான பதவியணியினர் 123 ஆகவும் வெற்றிடம் 11 உத்தியோகத்தர்களாகவும் காணப்பட்டிருந்தது. | புதில் தரப்படவில்லை. | ஆளணி வெற்றிடங்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |